2nd August 1966]

மயிலாப்பூரில் ஸ்கூட்டர் விபத்து

*24 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை மயிலை ஆர். கே. மடம் ரோட்டில் 4-2-1966 அன்று நண்பகல் 2 மணிக்கு ஸ்கூட்டர் MSV 706 ஒருவரை மோதியது சம்பந்தமாகப் புகார் ஏதேனும் செய்யப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம்.

(இ) இராமகிருஷ்ண மடத்துச் சாலையும் தெற்கு மாட வீதியும் சந்திக்குமிடத்தில் 4-2-1966 அன்று MSV 706 எண் கொண்ட ஒரு ஸ்கூட்டரும் ஒரு சைக்கிளும் மோதிக்கொண்டதினால் விபத்து ஏற்பட்டது. ஸ்கூட்டர், சைக்கிள் ஓட்டியைக் கீழே தள்ளியதால் அவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன. ஸ்கூட்டர் ஓட்டி மீது சைதாப்பேட்டை 3-வது மாகாண மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஸ்கூட்டர் ஓட்டி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது.

தனியார் துறை பஸ்களில் கட்டண உயர்வு

*25 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங் களில் உள்ள தனியார் துறை பஸ்களில் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்தியது உண்மையா?

(இ) ஆமெனில், பஸ் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) ஆம்; வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள தனிப்பட்ட பஸ் முதலாளிகள் 1966 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பஸ் கட்டணத்தை உயர்த்தினர்; ஆனால், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பஸ் முதலாளிகள் 1966 மார்ச் மாதத்தில்தான் பஸ் கட்டணத்தை உயர்த்தினர்.

(இ) ஆம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இந்த பஸ் கட்டணத்தை உயர்த்தாமலே, முன்பு போட்டிருந்த கட்டணத்தை வசூலித்தே நடத்தினால் கூட கட்டுபடி ஆகும்; ஆனால் அரசாங்கம் தான் வற்புறுத்தி உயர்த்தச் சொன்னதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் வற்புறுத்த வேண்டிய நிமித்தம் இல்லை. இதற்கு மேல் போகாமல் கட்டணம் விதிக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. அந்த அளவில் பாதி